குன்னத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி. கீதா

ந. க. எண். 06/2023-2024 நாள் : 30.12.2023

பொருள் : கோயம்புத்தூர் மாவட்டம் -அன்னூர் ஊராட்சி ஒன்றியம், குன்னத்தூர் ஊராட்சி மற்றும் கிராம க.ச.எண்கள் : 167/1A1,1C1 & 169/1E2B 2.05ஏக்கர் அல்லது 8297 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கான ஊராட்சி அனுமதி வழங்கி உத்தரவிடல்- தொடர்பாக.

பார்வை:

1. சாலை அமைப்பு மற்றும் பொது ஒதுக்கீடு தானப்பத்திரம் மூலம் வழங்கியது - பத்திர பதிவுத்துறை பத்திர எண்: 16287/2023, நாள்: 12.12.2023
2. மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குநர்/ உறுப்பினர் செயலர், கோயம்புத்தூர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் : CBELPA/1CSBMU2X/2023 /TCP நாள் : 21.12.2023
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் வரைபட அனுமதி எண்: ம.வ/கோ.ம.எண்:600/2023 நாள் : 21.12.2023 வழங்கப்பட்டுள்ளது
4. CITY CASTLE DEVELOPERS (P) LTD, NO.1 RATHINAM TOWERS, VGP NAGAR, KURUMBAPALAYAM, SATHY ROAD, COIMBATORE – 641107 அவர்களின் விண்ணப்ப நாள் : 28.10.2023.
5. ஊராட்சி வளர்ச்சி கட்டணம் ரசீது எண் : 18212 நாள் : 30.12.2023
6. அபிவிருத்தி கட்டணம் ரசீது எண் : 18211 நாள் : 30.12.2023

உத்தரவு

1.பார்வையில் குறிக்கப்பட்டுள்ள அணைத்து கடிதங்கள் மற்றும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் இணை இயக்குனர்/உறுப்பினர் செயலர் அவர்களின் ந.க.எண் : CBELPA/1CSBMU2X/2023/TCP, நாள்: 21.12.2023-ன் படி கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், குன்னத்தூர் ஊராட்சி மற்றும் கிராம க.ச.எண்கள் : 167/1A1,1C1 & 169/1E2B 2.05 ஏக்கர் அல்லது 8297 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு வரைபட அனுமதி எண் : ம.வ/கோ.ம.எண்: 600/2023 நாள் : 21.12.2023 எண்ணின் படி திட்ட அனுமதி எண் : 697/2023 - ன் படி வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் அன்னூர் சார்பதிவாளர் அலுவலக பதிவு எண் : 16287/2023, நாள்: 12.12.2023 மூலம் பதிவு செய்யப்பட்டு மேற்படி அசல் ஆவணமும் ஊராட்சியில் பெறப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு பரிசீலனை கட்டணம் ஊராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது இரசீது எண் : 18211, நாள் : 30.12.2023 மேலும் மனை பிரிவிற்கு ஊராட்சியில் தீரமானம் நிறைவேற்றப்பட்டுள்ளது தீர்மான எண் : 458 நாள் : 29.12.2023-ன் படி மேற்குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவுக்கு இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் மேற்படி மனைப்பிரிவிற்கு விண்ணப்பதாரரால் தார்சாலை, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய், தெருவிளக்கு, மின்சார இணைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்:

1.மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர் நிலைகள் அரசு புறம்போக்கு திறந்தவெளி ஒதுக்கீடு அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் கலிமனை உத்தேச சாலை மற்றும் ரயில் தண்டவாளம் பொதுப்பதை மற்றும் நிலஉச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனை இடம் அதிக உயர் மின்னழுத்த பாதை போன்றவை அமைந்திருக்கக்கூடாது.

2. மனைப்பிரிவு கட்டமைப்பு(Frame Work) செய்த இம்மனைப்பிரிவில் அமையும் மனைகளின் உரிமையாளர்கள் அவர்களின் மனையை முறைப்படுத்தப்படாமல் இருப்பின் மின்சாரம், குடிநீர், கழிவு நீர், வடிகால் அமைப்பு துண்டிக்கப்படும்.

3. மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படாது.

4. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரித்தன்மையை உறுப்பினர் செயலர் (பொறுப்பு) கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்த புகார்கள் கண்டறியப்படின் ஒட்டுமொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. இம்மனைப்பிரிவில் அமையக்கூடிய தனிமனைகளுக்கு வீடு கட்ட வரைபடம் அங்கீகாரம் வழங்கும்போது அடிப்படை வசதிகள் அனைத்தும் நிறைவேற்றிய பின்னர் தான் வரைபடம் அங்கீகாரம் வழங்கப்படும் (குடிநீர் வசதி, சாக்கடை வசதி, தெருவிளக்கு வசதி மற்றும் சாலை வசதி)

5.மேலும் உள்ளூர் திட்ட குழுமத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அணைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்,

இணைப்பு : வரைபடம்

தலைவர் / செயல் அலுவலர்

தலைவர்
குன்னத்தூர் ஊராட்சி

பெறுநர் :

CITY CASTLE DEVELOPERS (P) LTD,
NO.1 RATHINAM TOWERS,
VGP NAGAR,
KURUMBAPALAYAM, SATHY ROAD,
COIMBATORE – 641107

நகல்கள்

1.கோயல்புதூர் உள்ளூர் - திட்டக்குழுமம் உறுப்பினர் செயலர்,

2. சார்பதிவாளர் அலுவலர்

சார்பதிவாளர் அலுவலகம், அன்னூர்.